## இந்திய பசுமைக் கட்டட கவுன்சிலிடமிருந்து

# கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனைக்கு ‘தங்க’ தரச் சான்றிதழ்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை, செப். 27 –

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் நேற்று முன்தினம் (25–09–2024) சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்து வமனையில் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் Inox Air Products நிறுவனம் CSR நிதியின் மூல மாக நோயாளிகள் மற்றும் நோயாளி உடனாளர்கள் மருத்து வமனையின் உள்ளேயும், வளா கத்திலும் சிகிச்சைக்காக சென்று வருவதற்காக 3 Battery வாக னங்கள் தொடங்கி வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வந் தார்.

மேலும் தமிழ்நாடு அரசு ஊழி யர்கள் மற்றும் ஓய்வூதியதாரர் கள் பயன்பெறும் வகையில் National Health Insurance Scheme (NHIS) மற்றும் நீதிபதி கள், பாராளுமன்ற உறுப்பினர் கள், ஒன்றிய அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் அனைவரும் இம்மருத்துவமனையில் இலவச சிகிச்சையினை பெறும் வகை யில் Central Government Health Scheme (CGHS) திட் டத்தில் இணைக்கப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப் பட்டது.

தமிழ்நாடு அரசு மருத்துவம னைகளில் முதன்முறையாக இந் திய பசுமை கட்டிட கவுன்சிலா னது (IGBC Healthcare Projects) இம்மருத்துவமனை கட்டிடத்திற்கு தங்கம் தரச்சான்றி தழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட் டுள்ளதை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

**கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை**

கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை கடந்த ஆண்டு ஜீன் திங்கள் 15ஆம் நாள் முதலமைச்சர் அவர்க ளால் திறந்து வைக்கப்பட்டது. ஏறத்தாழ ரூ.500 கோடி செலவி லான இம்மருத்துவமனை மிகப் பெரிய அளவில் மக்களின் பயன் பாட்டில் சிறந்து விளங்குகிறது. இம்மருத்துவமனை தொடங்கப் பட்ட நாள் முதல் தற்போது வரை புறநோயாளிகள் 3,37,275 பேரும், உள்நோயாளிகள் 1,02,497 பேரும், அறுவை சிகிச் சைகள் 3,881 பேருக்கு செய்யப் பட்டுள்ளது. மேலும் இரத்த பரி சோதனைகள் 11,99,108 பேருக்கும், சி.டி ஸ்கேன் பரிசோ தனைகள் 12,860 பேருக்கும், MRI பரிசோதனைகள் 4,330 பேருக்கும், எண்டோஸ்கோப்பி பரிசோதனைகள் 3,020 பேருக் கும், டயாலிசிஸ் சிகிச்சைகள் 10,929 பேருக்கும் இம்மருத்துவ மனையில் வெற்றிகரமாக செய் யப்பட்டிருக்கிறது. மேலும் இம்ம ருத்துவமனை ஆரம்பித்து ஓராண்டு நிறைவு பெற்ற நிலை யில் வேறு எந்த மருத்துவமனை யிலும் நிகழாத ஒரு சாதனை யாக மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு நாளொன்றுக்கு சராசரியாக 1300 முதல் 1500 வரை புறநோயாளிகளும், 500 முதல் 600 பேர் வரை உள்நோ யாளியாகவும் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகின்றனர். மேலும் இம்மருத்துவமனையில் 15 நவீன அறுவை அரங்குகள் என்று பல்வேறு சிறப்புகளுடன் இம்மருத்துவமனை இயங்கி வரு கிறது.

**ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் 3 Battery வாகனங்கள்**

மேலும் இம்மருத்துவம னைக்கு கூடுதல் சிறப்பினை சேர்த்திடும் வகையில் ரூ.13 இலட்சம் செலவில், Inox Air Products நிறுவனம் CSR நிதி யின் மூலமாக நோயாளிகள் மற் றும் நோயாளி உடனாளர்கள் மருத்துவமனையின் உள்ளேயும், வளாகத்திலும் சிகிச்சைக்காக சென்று வருவதற்காக 3 Battery வாகனங்கள் இம்மருத்துவ மனை பயன்பாட்டிற்கு ஒப்படைக் கப்பட்டது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

அதேபோல் முதலமைச்சர் அவர்கள் ஒரு மகத்தான திட்டம் ஒன்றினை அறிவித்தார்கள். அதாவது, தமிழ்நாடு அரசு ஊழி யர்கள் மற்றும் ஓய்வூதியதாரர் கள் பயன்பெறும் வகையில் அரசு மருத்துவக்கல்லூரிகளில் சிகிச்சை மேற்கொள்ள National Health Insurance Scheme (NHIS) பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்று அறிவித்தார்.

இதற்கு முன்னாள் தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே பயன்படுத்தி வந்த அரசு ஊழி யர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்க ளின் கோரிக்கையினை ஏற்று, National Health Insurance Scheme (NHIS) அரசு மருத்து வக்கல்லூரி மற்றும் மருத்துவம னைகளிலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அறிவித்தி ருந்தார். அதற்கான பணிகள் நடைபெற்று வந்து அதில் முதல் மருத்துவமனையாக கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்து வமனையில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதிய தாரர்கள் அனைவரும் இம்மருத் துவமனையில் எவ்வித கட்டண மும் செலுத்தாமல் இலவச சிகிச்சையினை பெற்றுக் கொள் ளலாம் என்னும் திட்டம் இன்று முதல் தொடங்கப்பட்டுள்ளது.

அதோடு மட்டுமல்லாமல் இம் மருத்துவமனையில் இன்னொரு கூடுதல் வசதியாக பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள், மத் திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் அனைவரும் இம்மருத்துவமனையில் இலவச சிகிச்சையினை பெறும் வகை யில் இம்மருத்துவமனையானது Central Government Health Scheme (CGHS) திட்டத்தில் இணைக்கப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு மருத்துவத்துறை வரலாற்றில் மிகப்பெரிய மைல் கல்லாகும்.

**தங்கம் தரச்சான்றிதழ் மற்றும் பதக்கம்**

தமிழ்நாடு அரசு மருத்துவம னைகளில் பசுமை கட்டிடமாக வடிவமைக்கப்பட்டு பொதுப் பணித்துறையால் உருவாக்கப் பட்ட இம்மருத்துவமனை கட்டிடத் திற்கு இந்திய பசுமை கட்டிட கவுன்சிலானது தங்கம் தரச்சான் றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப் பட்டுள்ளது. இம்மருத்துவமனை யில் பல்வேறு சிறப்புக்குரிய திட்டங்கள் இம்மருத்துவ மனை யில் இருந்து துவங்கப்படவுள்ளது என்று அமைச்சர் மா.சுப்பிர மணியன் தெரிவித்தார்.

---

## கழக பவளவிழாவை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில்

# அமைச்சர் க.பொன்முடி கழகக் கொடியேற்றுகிறார்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், செப்.27-

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக பொறுப் பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி விடுத்த அறிக்கையில், கழக பவள விழாவை முன்னிட்டு உயர்க்கல்வி துறை அமைச் சர் முனைவர் க.பொன்முடி கீழ்க்கண்ட வாறு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

29.9.2024 ஞாயிறு அன்று விழுப்புரம் தெற்கு மாவட் டத்தில், கழக பவள விழா கொடி யேற்றும் நிகழ்ச்சிகள் விப ரம் வருமாறு:-

கோலியனூர் ( மேற்கு ) ஒன்றியம், மாலை 4.00 மணி - எடப்பாளையம்,

மாலை 4.30 - கண்டம் பாக்கம், கோலியனூர் ( தெற்கு ) ஒன்றியம்,

மாலை 4.45 வி.அரிய லூர், மாலை 5.00 மணி - பில்லூர், கோலியனூர் ( கிழக்கு ) ஒன்றியம், மாலை 5.15 மணி - சுந்தரி பாளை யம்,

மாலை 5.30 மணி - தாதம்பாளையம், மாலை 5.45 மணி வளவனூர் பேரூர்,

மாலை 6.15 மணி - இளங்காடு,

இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப் பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அறிவித் துள்ளார்.

---

## தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.வினர் பெருந்திரளாகக் கலந்து கொள்வீர்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வேண்டுகோள்!



புதுக்கோட்டை,செப் .27-

தி.மு.க. பவள விழாவை முன்னிட்டு நாளை (28.09.2024-சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் அவர்கள் சிறப்புரை ஆற்ற உள்ளார்.

அது சமயம் இக்கூட்டத் தில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள். மாநகர. ஒன்றிய, நகர, பகுதி. பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், முந்நாள். இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், பேரூராட்சி மன்ற தலைவர்கள். ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றியக்குழு உறுப்பினர்கள்.

மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பி னர்கள், முன்னாள்- இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளை கழக இளைஞரணி, மாண வரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி. வழக்கறிஞர் அணி, விவசாய அணி. விவ சாய தொழிலாளர் அணி. இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி. மீன வரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்து வர் அணி. வர்த்தகர் அணி ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பிஎல்ஏ). பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பிஎல்சி) மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.



புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம் பெருங்களூர் ஊராட்சி புதுக்குளம் மற்றும் வாராப்பூர் ஊராட்சி வளர்சேரிப்பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளில் நிலவி வந்த குறைந்த மின்னழுத்த மின்வினியோகத்தை சரி செய்யும் வகையில் 110 அதிக திறன் கொண்ட புதிய மின்மாற்றிகளை 24.9.2024 அன்று மக்கள் பயன்பாட்டிற்கு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் மு.க. ராம கிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் சரண்யா ஜெய்சங்கர், சதீஷ்குமார், பெருங்களூர் கவுன்சிலர் முத்துலட்சுமி சாமியய்யா மற்றும் மின்வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

---

# “மாண்புமிகு உதயா”

## திராவிடப் பாரம்பரியத்தில் உதித்த வழித்தோன்றல்!





**குத்தாலம் பி. கல்யாணம்**
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்

திராவிட சித்தாந்தத்தை காக்கும் காவல் அரண் தி.மு.க. திராவிட பாரம்பரியம் எனும் சுடர்விளக்கை அணையாமல் காப்பாற்றி வருகிற இயக்கம் தி.மு.க. முடிவற்ற ஊக்கசக்தி – ENDLESS INSPIRATION, ஈடில்லா பாரம்பரியம் MATCHLESS LEGACY, கொண்ட இயக்கம்.

தமிழ் மக்களின் நலனுக்காக வாழையடி வாழையாக உழைத்து வரும் இந்த இயக்கம் ”தமிழ் கூறும் நல்லுலகம் உள்ளவரை வளர்ந்து தழைத்தோங்கி உயர்ந்து நிற்கும் இயக்கமாகும்.

DMK IS THE ONLY PARTY WITH ITS MOORINGS IN DRAVIDIAN MOVEMENT திராவிட இயக்கத்தோடு கட்டுண்டு கிடக்கும் ஒரே இயக்கம் தி.மு.க மட்டுமே.

THE DRAVIDIAN MOVEMENT CAPTURED THE IMAGINATION OF THE PEOPLE BY HIGHLIGHTING GENUINE ISSUES.

திராவிட இயக்கம் அதிமுக்கிய பிரச்சனைகளில் மக்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்து உயர்த்திப்பிடிக்கும் இயக்கம்.

DMK DOMINATED THE POLITICAL SCENE BY MEETING REGIONAL ASPIRATIONS.

மாநில உரிமைகளுக்கான உணர்வுகளைத் தூண்டி, அரசியல் அரங்கத்தின் உயர்நிலையில் பரிமளிக்கும் இயக்கம்.

DMK IS STRONGLY POSITIONED; AND CADREBASED DRAVIDIAN PARTY.

தி.மு.க அதன் தொண்டர்களின் பலத்தோடு அழுத்தமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்ட இயக்கம்.

DMK IS DEEP ROOTED AND WELL ORGANIZED POLITICAL PARTY.

ஆழமாக வேரூன்றி செம்மையான கட்டமைப்புகொண்ட அரசியல் கட்சி தி.மு.க.

MANY PARTIES ” USE DRAVIDA IN THEIR NAME;

BUT ONLY DMK FOLLOWS THE DRAVIDIAN IDEOLOGY TO THE CORE,

“திராவிடர் என்ற சொல்லை பல கட்சிகள் நிர்பந்தம் காரணமாக பயன்படுத்தினாலும் , திராவிட இயக்க கொள்கையை மனதில் அழுத்தமாக இறுத்தி வைத்து பின்பற்றும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகும்.

THAMIZH NADU IS THE CUSP OF A DRAVIDIAN CATHARSIS – தமிழகத்தில் திராவிட உணர்வின் கூர்மை அழுத்தமாக மேலோங்கி நிற்கும் இயக்கம் தி.மு.க. எனவே தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் ”தி.மு.கழகம் தமிழ் சமுதாயத்தின் உரிமைகளை வென்றெடுக்கப் புறப்பட்ட இயக்கம் என வர்ணித்துள்ளார்கள்.

21 ஆண்டுகளுக்கு முன்பு –2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடை பெற்ற விழுப்புரம் மாநாட்டில் உரையாற்றிய கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் பெருந்தகை அவர்கள் ”இம் மாபெரும் இயக்கத்திற்கு எங்களுக்குப் பிறகு ”கொள்கை வாரிசு இல்லாமல் விட்டுவிட முடியுமா? என்ற வினாவை எழுப்பி அந்த கொள்கை வாரிசு, கழகத்தலைவர் மாண்புமிகு தளபதி அவர்கள் தான் என்பதை அனைவருக்கும் உணர்த்தும் வரிகளை தனது உரையில் அழுத்தமாக குறிப்பிட்டார்கள்.

நூற்றாண்டைக் கடந்த நீதிக்கட்சி, அதன் நீட்சியாக விளங்கும் தி.மு.க.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத்தலைவர் தளபதி எனும் ” முப்பெரும் தலைமைப்பண்பு மிக்கவர்களால் அசைக்க முடியாத இரும்புக்கோட்டையாக திகழும் இயக்கம் தி.மு.க .

அந்த இயக்கத்தின் நம்பிக்கை ஒளிக்கீற்றாக திகழ்பவர் மாண்புமிகு உதயா.

கலைஞரின் பேரன், தலைவர் தளபதியின் மகன் என்ற அடையாளத் தோடு நின்றுவிடாமல், ஒரு தலைவருக்குரிய முக்கிய அடையாளமே அவரது அணுகுமுறை தான் எனும் இலக்கணத்திற்கு ஏற்ப அரசியலில் உலாவருபவர் மாண்புமிகு உதயா.

அரசியல் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், கட்சிப்பொறுப்பு எதுவும் இல்லாமல், எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், கட்சிக்காக உழைக்கத் தொடங்கியவர்.

அரசியலில் களத்திற்கு வந்த போது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு அவருக்கு இயல்பாகவே கிடைத்தது.

தான் ஒரு தேர்தல் பரப்புரையாளர்நட்சத்திர பேச்சாளர் (STAR CAMPAIGNER) என்பதை நிரூபிக்கும் வகையில் அவரது தேர்தல் பிரச்சார பேச்சு மக்களை கவர்ந்தது. செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது, 2019 நாடாளுமன்ற தேர்லில் 37 மக்களவை தொகுதிகளையும்,அதோடு நடைபெற்ற 17 சட்டமன்றத் தொகுதிகளையும் கழகம் கைப்பற்றுவதற்குத் தனது உழைப்பை நல்கியவர் மாண்புமிகு உதயா ஆவார்.

இதனைத் தொடர்ந்து உதயாவுக்கு கட்சிப்பதவி வழங்க வேண்டும் என்ற குரல் கழகத்தவர் மத்தியில் எழுந்தது. அந்த சூழலில் இளைஞரணியைப் பலப்படுத்தச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இளைஞரணி செயலாளர் பொறுப்பை ஏற்றார். GIVE ME THE YOUTH I WILL MAKE HEAVEN ON THE EARTH என்னிடம் இளைஞர்களை தாருங்கள் நான் இந்த மண்ணில் சொர்க்கத்தை உருவாக்கி காட்டுகிறேன் என்ற விவேகானந்தரின் வரிகளுக்கு ஏற்ப இளைஞரணியை வழிநடத்தி வருபவர்.

இளைஞரணி செயலாளர் என்ற நிலையில் தனது புயல் வேகப்பணியால் பம்பரம் போல் சுழன்றார். இதற்கு அவரது இளமை துடிப்பும் தகுதியும், திறமையும் கைக்கொடுத்தது.

”தலைமைத்துவம் என்பது கிரீடம் சூட்டிக்கொள்வது மட்டும் அல்ல, தியாகத்தழும்புகளை தாங்குவதும் தான் என்பதற்கு ஏற்ப மக்களுக்கான போராட்டங்களில் பங்கு பெற்றார்.

மக்கள் சேவையே, மகேசன் சேவை என்பதில் கவனம் செலுத்திய உதயா குறித்து 2018 ஆம் ஆண்டு இந்து ஆங்கில பத்திரிக்கையில் வந்த செய்தி.

LIKE KALAIGNAR UDHAYA CAN SPEAK EXTEMPORE AND TAKE IN STRIDE DIFFICULTY AND EMBARRASSING QUESTIONS FROM THE MEDIA. TO SCORE BROWNIE POINTS OVER HIS POLITICAL RIVALS. HE HAS A METEORIC RISE WITH THE PARTY AND GOVERNMENT – HINDU.

I COULD NOT AVOID POLITICS AS I AM BORN INTO A POLITICAL FAMILY.

தலைவர் கலைஞரைப்போல் உதயநிதியாலும் எந்த மேடையிலும் தயார் செய்யாமலும் தன்னிடம் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு அவை தர்மசங்கடத்தை ஏற்படுத்தினாலும் அவருக்கே உரிய பாணியில் நகைச்சுவையுடனும் சிரமப்படாமலும் லாவகமாக எதிர்கொள்ள முடியம், தன்னுடைய எதிர்ப்பாளர்களையும் இனிய வார்த்தைகளால் எதிர் கொள்கிறார், அவருடைய வளர்ச்சி கட்சியிலும் ஆட்சியிலும் அசாதாரணமானது. தான் அரசியல் குடும்பத்தில் பிறந்துள்ளதால் உதயாவுக்கு அரசியல் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

2021 சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு நடைபெற்ற பொதுக்குழுவில் பேச எனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பை பயன்படுத்தி பொதுக்குழுவில் நான் பதிவு செய்த வரிகள் வருமாறு

”பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னதை பொதுக்குழுவில் பதிவு செய்ய விரும்புகிறேன். ”நமக்கு கிடைக்கும் சிப்பிகளில் எந்த சிப்பியின் வயிற்றில், எந்த முத்து கிடைக்கும் என்று தெரியாது. எனவே எல்லா சிப்பிகளையும் வளரவிடுவோம். எந்த சிப்பி வயிற்றில் நல்முத்து கிடைக்கிறதோ அதனை கழகத்திற்குப் பயன்படுத்துவோம் என்பதாகும்.

அப்படி எங்களின் திருவெண்காடு சிப்பி ஈன்றெடுத்த நல்முத்து தான் உதயநிதி ஆவார் என்பதாகும். அப்படிப்பட்ட நல்முத்து உதயா அவர்களை கழகத்திற்கு பயன்படுத்த முன்வர வேண்டும் என்று எனது பேச்சில் குறிப்பிட்டிருந்தேன். எனது இந்த பேச்சால் உதயாவை முன்னிலைப்படுத்த இப்பொழுது என்ன அவசரம்? என்ற முணு முணுப்புக்கு முற்றுபுள்ளி வைத்து தேக்க நிலையை உடைக்கும் வாய்ப்பாக எனது பேச்சு அமைந்ததில் எனக்கு ஒரு கடமை உணர்வு.

தி.மு.கவிற்கு வியர்வை, ரத்தம் சிந்திய மூத்த முன்னோடிகளுக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்பது உதயா அவர்களின் வாசகமாகும்.

2021 சட்டமன்றத்தேர்தலில் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியின் வேட்பாளர். 234 தொகுதிகளிலும் புரட்சிகரபிரச்சாரம் மூலம் ஒரு பானை சோற்றுக்கு; ஒரு சோறு பதம் என்பது போல ” மதுரையில் மோடி அரசு AIMMS மருத்துவமனையை கையோடு எடுத்து வந்திருக்கிறேன் என்று கூறி, ஒரு செங்கல்லைக் காட்டி நூதனமான பிரச்சாரம். இந்த ஒற்றை செங்கல் புரட்சி, மக்களின் மனங்களை பெரிதும் கவர்ந்தது .

சட்டமன்ற உறுப்பினராக வெற்றி வாகை சூடுகிறார். சட்டமன்ற உறுப்பினர் பணியில் சுறுசுறுப்பு.

அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த நேரம். அந்த நேரத்தில் கழகத்தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களுக்கு 09.12.2022ல் நான் எழுதிய கடிதவரிகள்.

உதயநிதி ஸ்டாலின் அமைச்சர் ஆவதற்கான நிலையை எட்டிப்பிடித்திருக்கும் சந்தர்ப்பசூழலை நழுவவிடாமல் TO SEIZE THE OPPORTUNITY என்ற நிலை எடுக்க வேண்டி.

அமைச்சரவையில் ஒருவரை இடம்பெறச் செய்வது என்பது முதலமைச்சராகிய தங்களின் தனித்த (PREROGATIVE) உரிமையாகும். எனவே தந்தை நிலையிலிருந்து, என்றில்லாமல் மாண்புமிகு முதல்வர் என்ற நிலையில் எடுக்க வேண்டிய தனித்த உரிமை முடிவாகும்.

தாங்களும், தம்பி உதயநிதியும் வான்புகழ் வள்ளுவரின் இலக்கண வரம்பில் சிறந்து நிற்கும் தந்தை – மகன் ஆவீர்கள்.

நிதானமான அணுகுமுறை, அவசரத்தன்மை இல்லாத இயல்பான பொறுமை, ஒவ்வொருவரையும், எடை போட்டு, மனதில் இறுத்திக் கொள்ளும் தன்மை, சினிமாத்தனமான (HISTRIONIC) ஈர்ப்பைத்தாண்டி, மக்களைத் தன்வசப்படுத்தி இருத்தி வைக்கும் தனித்த ஈர்ப்பு (CHARISMA), ஆகிய உள்ளார்ந்த ஆற்றலை (INHERENT) பெற்று மக்களின் ஈர்ப்பு சக்தியாக CROWD PULLING PERSONALITYயாக திகழ்பவர் தம்பி உதயநிதி ஆவார்.

தி.மு.க எனும் இம்மாபெரும் இயக்கத்திற்கு எங்களுக்குப் பிறகு ”அரசியல் வாரிசு இல்லாமல் விட்டுவிட முடியுமா? என்று இனமானப்பேராசிரியர் அவர்கள் தங்களை மனதில் வைத்து சொன்ன வைரவரிகள் தம்பி உதயநிதி அவர்களுக்கு முற்றிலும் பொருந்தும் இன்றைய அரசியல் சூழல்.

தலைவரின் மகன் என்பது மட்டும் தகுதி (QUALIFICATION) ஆகிவிட முடியாது. அதே நேரத்தில் அனைத்து தகுதிகளும் பெற்றிருந்தும் தலைவரின் மகன் என்பதால் அதுவே அவருக்கு தகுதியின்மையை (DISQUALIFICATION) உண்டாக்கி விடக்கூடாது; காரணம் அமைச்சர் (துணை முதலமைச்சர்) ஆவதற்குரிய அனைத்து தகுதிகளையும் (DESERVING) இயல்பாகவே பெற்றுள்ளவர்.

மாண்புமிகு உதயா ஒரு NATURAL CHOICE / NATURAL SELECTION எனும் இயல்பான தேர்வுக்கு உரியவர் ஆவார்.

அரசியலில் லாபம் ஈட்டி தராத வாரிசுகளை NON PERFORMING ASSETS என்று குறிப்பிடுவார்கள். மாறாக தான் சார்ந்த இயக்கமான கழகத்திற்கு

பெரிதும் லாபம் ஈட்டித்தரும் வாரிசாக திகழ்பவர் மாண்புமிகு உதயா ஆவார்.

ஏனைய இயக்கங்கள் அவ்வப்போது சந்திக்கும் தலைமைப் பஞ்சத்தையும், தேக்க நிலையையும், சந்திக்காமல் தொடர்ச்சியான தலைமையை அடுத்தடுத்து பெற்று வரும் மாபெரும் இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கிடைத்திருக்கும் கொள்கை வாரிசு மாண்புமிகு உதயா ஆகும்.

எனவே கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலையும் நிலை திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு எதிர்காலத்தில் வந்து விடக்கூடாது என்பதற்கு கீழ்க்கண்ட பத்திரிக்கை செய்தியினை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

07.05.2021 தினமணி தலையங்கத்தில் உதயநிதிஸ்டாலின் MLA குறித்து இடம் பெற்றுள்ள வரிகள் ”உதயநிதிக்கு அமைச்சரவையில் இடம் அளிக்காதது சற்று நெருடலாகத்தான் இருக்கிறது அரசியல் வாரிசு என்று அடையாளம் காட்டப்பட்டப் பிறகு அடக்கி வாசிக்க வேண்டிய அவசியம் என்ன?

30.05.2022 Times of India வெளியிட்டுள்ள Will Political inheritors change the discouse? என்ற தலைப்பில் திரு. உதயநிதி அவர்கள் குறித்து இடம் பெற்றுள்ள செய்தி.

WHEN UDHAYA MADE DEPUTY C.M SOONER THAN LATER; HE WILL PROVE HIS ADMINISTRATIVE SKILLS, POLITICAL ACUMEN HOWEVER IS A DIFFERENT GIFT.

உதயா அவர்களுக்கு துணை முதல்வர் பதவி வழங்கப்படும் நிலையில் அவர் தனது நிர்வாக திறமையுடனும், அரசியல் கூர்மையுடனும் தனது தனித்த ஆற்றலால் செயல்படுத்துவார்.

உதயநிதிக்கு துணை முதல்வர் பதவி வழங்கப்படுமா? என செய்தியாளர்கள் வினவியதற்கு முதல்வர் அவர்கள் ”கோரிக்கை வலுக்கிறதே தவிர இன்னும் பழுக்கவில்லைஎன்று தன்னடக்கத்தோடு பதில் அளித்திருக்கும் நிலையில் மாண்புமிகு உதயா அவர்கள் துணை முதல்வராக வரவேண்டிய அவசியம் குறித்து இந்து ஆங்கில நாளிதழ் செய்தி.

UDHAYA’S GREAT CHALLENGE B. KOLAPPAN

உதயாவின் மிகப்பெரிய சவால்.

IF HE DOES NOT RISE TO THE OCCASION IT COULD AFFECT

THE DRAVIDIAN MOVEMENT.

உதயா அவர்கள் அனைவரும் எதிர்பார்க்கும் நிலைக்கு (துணை முதல்வர்) தன்னை உயர்த்திக்கொள்ளவில்லை எனில் அது திராவிட இயக்கத்தை பாதிக்கும்.

IF MR. UDHAYA FAILS TO USHER IN THE CHANGES EXPECTED OF YOUNG POLITICIANS OF MODERN TIMES. IT WILL PROVE TO BE DIFFICULT FOR THE DRAVIDIAN MOVEMENT AS A WHOLE –

நவீனகால இளைஞர்களின் எதிர்ப்பார்ப்புக்கும், மாற்றத்திற்கும் ஏற்ப உதயாவின் உயர்வு குறித்த கட்டியம் கூறத் தவறினால், அது திராவிட இயக்கத்தின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்பது நிரூபணமாகும் என்பதாகும்.

HON’BLE UDHAYANITHI STALIN WILL BE ELEVATED AS THE DEPUTY CHIEF MINISTER? REPORTERS.

உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக உயர்த்தப்படுவாரா? செய்தியாளர்கள்

THERE WILL BE CHANGE; THERE WON’T BE ANY DISAPPOINTMENT HON’BLE C.M

“மாற்றம் இருக்கும் ஏமாற்றம் இருக்காது – மாண்புமிகு முதல்வர் அவர்கள்

காலம் கனிந்த வாழ்த்துகள்